உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.446/2021

| | |
|---|---|
| பெயர் | :தவமணி (அ.சா.2) |
| தகப்பனார் பெயர் | :மருதன் |
| கணவர் பெயர் | : |
| வயது | :60 |
| கிராமம் | :நாவினிபட்டி |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :ரைஸ்மில் ஊழியர் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

19.03.2025

முதல் விசாரணை:

எங்கள் ஊரைச்சார்ந்த மலைச்சாமியை எனக்கு தெரியும். நானும் மலைச்சாமி அ.சா.1ம் மரக்கடையில் வேலை செய்து வந்தோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும், அ.சா.1 மலைச்சாமிக்கும் இடையே சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு சண்டை நடந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. (அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

நானும் மலைச்சாமியும் கடந்த 13.07.2017ம்தேதி சுமார் 8.30 மணிக்கு இரவு வேலை முடித்து செல்லும் போது, சந்தைப்பேட்டை, மேலூர் பஸ்ஸ்டாப்பில் இருந்த போது, TN59 AS 1427 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவில் வந்த எதிரிகள் திருவாசகம், நம்பி என்ற சந்திரன், எதிரி ராஜதிலகம், ஆஜர் எதிரி மாணிக்கவாசகம், ராமன்பாபு ஆகியோர்கள் அரிவாள், கத்தி மற்றும் மூங்கில் கட்டை ஆயுதங்களுடன் இறங்கி 1ம் எதிரி

திருவாசகம் கையில் வைத்திருந்த அரிவாளால் இத்தோடு செத்து ஒழிந்து தொலைடா என்று கூறியபடி மலைச்சாமி(அ.சா.1) தலையில் வெட்டி அவருக்குவெட்டுக்காயத்தையும், ஆஜர் 2வது எதிரி நம்பி என்ற சந்திரன் அ.சா.1.மலைச்சாமியை வலது பக்க கத்தியால் வெட்டி ரத்தக்காயத்தை ஏற்படுத்தியும். ஆஜர் 3வது எதிரி மாணிக்கவாசகம் கையில்வைத்திருந்த கட்டையால் அ.சா.1ஐ வலது ஆட்காட்டி விரலில் அடித்து மேலும் நடவிரலிலும், ஆட்காட்டி விரலிலும் கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், ஆஜர் 4வது எதிரியான ராஜதிலகம், கத்தியால் மலைச்சாமி(அ.சா.1)ஐ வலது பக்க மார்பில் குத்தி ரத்தக்காயத்தையும், ஆஜர் 5வது எதிரி ராமன்பாபு அ.சா.1 மலைச்சாமியை கையில் வைத்திருந்த கட்டையால் அடித்து கீழே தள்ளியும் அனைத்து எதிரிகளும் அ.சா.1 மலைச்சாமியை ஒன்று சேர்ந்து தாக்கியும் அனைவரும் தப்பித்து ஆட்டோவில் ஏறி சென்றுவிட்டதாகவும், சம்பவத்தை நேரடியாக பார்த்ததாகவும், நான் அப்போது அ.சா.1 மலைச்சாமியுடனே இருந்துள்ளேன்என்றும் அவரது வீட்டிற்கு தகவல் சொல்லியும், மலைச்சாமியை போக்கு ஆட்டோவில் அரசு மருத்துவமனை மேலூருக்கு சிகிச்சையில் சேர்த்துவிட்டு, காவல்துறையில் நடந்தவற்றை கூறி வாக்குமூலம் கொடுத்துவிட்டு ஆஜர் எதிரிகளுடன் சமாதானம் ஆகி பொய்சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி : இல்லை.
மறுவிசாரணை : இல்லை

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.03.19 17:49:32 +0530

Assistant Sessions Judge

Melur